தொகுதி- ருஎ :: பகுதி-அ — Vol. 57 :: No. 8

# செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1992
பிலவ—கார்த்திகை
NOVEMBER — 1961

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 16—2—62)

உ
கடவுள் துணை

# செந்தமிழ்

| தொகுதி. ருஎ<br>Vol. 57 | திருவள்ளுவர் ஆண்டு 1992<br>பிலவ —கார்த்திகை<br>1961 — November | பகுதி. அ<br>No. 8 |
|---|---|---|


# இளம்பூரணர் எழுத்துரை

ஆ. சிவலிங்கனர், மயிலம்

(222 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(4) பொன் என்பது செய்யுளில் மட்டும் பகர முதல் மொழிவருமிடத்துப் 'பொலம்' என்ருதலும் உண்டு. பொலல் படை எனக் காண்க. இது பற்றிய நூற்பா "பொன்னென்கிளவி.........தொடரியலான" (357) என்பதாம். அந்நூற்பாவில் தொடரியலான என்றதனுல் பகரம் அல்லாத பிற வன்கணத்துக் கண்ணும் அம்முடிபு கொள்க எனக் கூறிப் பொலங்கலம், பொலஞ்சுடர், பொலந்தேர் என உதாரணம் காட்டினர் இளம்பூரணர். அந்நூற்பாவில் லகர உயிர் மெய்யும் மகர ஒற்றும் வருதல் பற்றிக் கூறப் பட்டிருத்தலின் மெல்லின முதல் மொழி வருமிடத்து அவ் விரண்டெழுத்துக்களும் வருதல் உண்டா இல்லையா என்ற ஐயம்வரும். 'பொலநறுந்தெரியல், பொல மலராவிரை என வருவன கொண்டு நோக்குமிடத்து லகரம் மட்டும் இருத்தலின் வன்கணத்துக்குக் கூறிய முடிபு அவற்றிற்குக் கூறுதற்கில்லை, என்ருலும் பொன்என இயல்பாகவின்றி னகரம் கெட்டு லகர மகரங்கள்பெற்று மகரம் கெடுதல் உண்மையின் வல்லின விதியிலேயே அடக்குதல் வேண்டும். அதனுல்

வல்லின விதிக்கு ஒன்றும் இனமாக நகர மகரமாகிய மெல்லினம் அமைதலின் அதனுள் அடக்கிக்கொள்ளுதல் வேண்டும். அதனால் இளம்பூரணர், "ஒன்றின முடித்தல் என்பதனுல் பொலநறுந்தெரியல், பொலமலராவிரை என்றாற்போல வரும் பிறகணத்து முடிபும் கொள்க" என்றார்.

**ஒன்றென முடித்தல்:**

ஒன்றென முடித்தல் என்பது, ஒன்று பற்றிக் கூறிய விதியிலேயே பிறிதொன்று பற்றியும் இதுவும் அதுவும் ஒன்றே எனக் கொண்டு முடித்தலாம். இதில் இனம் பற்றிய எண்ணமே யில்லை. இவ்வுத்தி வந்த நான்கிடம் காண்போம்.

(1) ஆல்+அடை என்பன ஆலடை எனப் புணரும் இதற்குக் கூறப்பட்ட விதி, "புள்ளியீற்று முன் உயிர் தனித்தியலாது. மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே" (139) என்பதாம். நாழி என்பது உரி என்பதுடன் புணரும்போது முதல் மொழியில் 'ழி' என்ற எழுத்துக் கெட்டு 'ட்' என்ற மெய்யெழுத்து வந்து நாட் எனறு நிற்கப் பின்னர் உரி என்பதன் உகரம் ஏறி 'நாடுரி' என முடியும். நாழி என்பது உயிரீறாகவிருந்து நாட் எனப் பின்னர் நிற்பினும் இயல்பான புள்ளியீறும் இதுவும் ஒன்றே எனக்கொண்டு உகரம் ஏறி முடிந்தது. அதனால் அந்நூற்பாவில், 'ஒன்றென முடித்தல் என்பதனால் இயல்பல்லாத புள்ளி முன் உயிர் வந்தாலும் இவ்விதி கொள்க" என்றார் உரையாசிரியர்.

(2) இவ்வாறே இயல்பான உயிரீற்றின் முன் உயிர் வந்தால் யகர உடம்படு மெய்பெறும் என்னவந்த

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் (141)

என்ற நூற்பாவின் உரையின் கீழும், "ஒன்றென முடித்தல் என்பதனால் விகாரப்பட்ட மொழிக்கண்ணும் உடம்படு மெய் கொள்க; மரவடி, ஆயிருதிணை எனவரும்" என்றெழுதினார்.

(3) வாழிய என்ற ஏவல் கருதாத வியங்கோட்கிளவியானது இறுதி எழுத்துக் கெட்டும் கெடாதும் வருமொழி வல்லெத்தோடு புணரும்.

> வாழிய வென்னும் சேயென் கிளவி
> யிறுதி யகரம் கெடுதலும் உரித்தே (21?)

என்றார் ஆசிரியர். வாழிய கொற்றா, வாழிகொற்றா என்பன எடுத்துக்காட்டுகள். வருமொழி மென்கண இடைக்கண முதல் மொழிகளாயினும் இறுதி யகரம் கெட்டும் கெடாதும் நின்று முடியும். வாழிய ஞெள்ளா, வாழிஞெள்ளா என்றும், வாழிய வளவா, வாழிவளவா என்றும் வருமாறு காண்க. நூற்பா வன்கணத்துக்குரிய முடிபாகக் கூறினும் பிறகணங்கட்கும் அதுவே முடிபாக இருத்தலின் அவற்றையும் கொள்ளவேண்டும். அதனால், "ஒன்றென முடித்தல் என்பதனால் பிறகணத்துக்கண்ணும் இவ்விதிகொள்க" என என்றார்.

(4) இவ்வாறே "உரைப்பொருட்கிளவி நீட்டமும் வரையார்" (213) என்னும் நூற்பாவில் அம்மா கொற்றா என உதாரணம் காட்டி, "ஒன்றென முடித்தல் என்பதனால் அந்நீட்சி இயல்புக்கணத்தும் கொள்க; அம்மாஞெள்ளா வரும்" என எழுதியதற்கும் விளக்கம் காண்க.

இதுவரை கூறிய தன்னின முடித்தல், ஒன்றின முடித்தல், ஒன்றென முடித்தல் ஆகியவற்றிற்குக் கூறிய முறைப்படி இலக்கணங் கொண்டு முடித்தால்தான் வேறுபடக் காணலாம். இல்லையே ஒன்றுக்குரிய உத்தி வேறு ஒன்றற்குரியதாக மாற்றிக் கூறநேரும்,

**ஞாபகம்:**

இவ்வுத்தி இரண்டிடங்களில் வந்துளது. ''ஞாபகங் கூறலாவது இரட்டுற மொழிந்து இரண்டு சொற்கும் பொருள்கோடல்'' என ஞாபகத்துக்கு விளக்கம் எழுதினர் இளம்பூரணர். (தொல். பொருள் 656) அதாவது நூலாசிரியர் இருவேறு பொருள்படும்படியான சொற்களை அமைத்துச் சென்றால் ஒரு பொருள்கொண்டு பின்னர்க் குறிப்பிடப்படாத வேறு கருத்தையும் ஆங்கு அமைத்துக்கொள்வதாம். இங்ஙனம் கொள்ளாக்கால் இரட்டுற மொழிதலுக்கும் இதற்கும் வேறுபாடில்லாமல்போய்விடும்.

(1) தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் றகரவொற் றாதலும் உரித்தே (215)

இந்நூற்பாவில் பல என்பது தன்முன் தான்வரின் பற்பல என லகரம் றகர ஒற்றாகும் என்பது கூறப்பட்டது. இதில் லகரம் றகர வொற்றாதலும் என்பது இரட்டுற மொழிந்ததாம். லகரம் உயிர்மெய் ஆதலின் றகர ஒற்றாதல் என்றவிடத்து லகர உயிர்மெய் றகர ஒற்றாதல் என்றும், லகர உயிர்மெய்யில் உள்ள லகர ஒற்று றகர ஒற்றாதல் என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால் இவ்விரண்டும் இங்குக் கொள்வதற்கில்லை. கொள்வதாயின் இரட்டுற மொழிதல் என்ற உத்தியாய்விடும். முதலிற் கூறிய பொருளைக்கொள்வதாயின் லகர உயிர்மெய் றகர ஒற்றாதல் இல்லை. திரிதல் என்பதில் உயிர் பிறிதோர் உயிராகவும், மெய் பிறிதோர் மெய்யாகவும், உயிர்மெய் பிறிதோர் உயிர்மெய்யாகவும் திரிதல் உண்டே தவிர மாறுபடத் திரிதல் இல்லை. அதனால் லகர உயிர்மெய் றகர ஒற்றாகத் திரிந்தது என்பது கூடாது. எனவே லகரம் றகர ஒற்றாதல் என்றவிடத்தில் லகர ஒற்று றகர ஒற்றாதல் என்றே கொள்ள வேண்டும், அங்ஙனமாயின் அகர உயிர் என்னாயிற்று என்பது வருமாதலின் அது

கெடும் என்றதாக வேண்டும். அவ்வாறு கெடும் என்று ஆசிரியர் கூறாதுவிட்டாலும் கூறியதாகக்கொள்வது ஞாபகம் எனப்படும். இந்நூற்பாவின் உரையில் உரையிாசிரியர், "லகரம் றகரமாம் என்னாது லகரம் றகர ஒற்றாம் என்ற ஞாபகத்தான் அகரம் கெடும் என்றுணகக்கொள்க" என்றெழுதினர்.

(2) ஆனின் னகரமும் அதனோ ரற்றே
நாண்முன் வரூஉம் வன்முதற் றொழிற்கே (125)

இதில் 'னகரமும்' என்பதிலுள்ள உம் இரட்டுற மொழிந்ததாம். இந்த உம்மை இறந்தது தழீகியதாம். அதாவது நான்காம் உருபின்கண் வரும் ஆன் சாரியையின் னகரத்தைத் (124) தழுவியதாம். ஆதலின் இறந்தது தழீஇய எச்சப் பொருளில் வந்ததாம். இதுவே எதிரது தழீஇயதாகவும் கொள்ளுதற் கமைந்தது. அதனால் உரையாசிரியர், "உம்மையை இரட்டுற மொழிதலானே எதிரது தழீஇயதாக்கி அதனான் நாளல்லவற்றுமுன் வரும் வன்முதற்றொழிற்கண் இன்னின் னகரமும் றகரமாய்த் திரிதல் கொள்க; பனியிற் கொண்டான் என வரும்" என்றெழுதினர், எனவே னகரமும் என்பதின் உம்மை இறந்தது தழீஇயதும் எதிரது தழீஇயதுமாகிய பொருள்களின் வந்தமையின் இரட்டுற மொழிந்ததாயிற்று ஆசிரியர் தொல்காப்பியரால். இவ்விரண்டனுள் பின்னதன் தொடர்பாகவேனும் ஒரு கருத்து ஆசிரியரால் சொல்லப்படாதது கொள்ள வேண்டியுளது. அது ஞாபகத்தாற்கொள்வதாம். "தொழிற்கண் இன்னின் னகரம் திரியும் எனவே பெயர்க்கண் இன்னின் னகரம் திரியும் எனவே பெயர்க்கண் இன்னின் னகரம் திரிதலும் திரியாமையும் உடைய என்பது ஞாபகத்தாற் கொள்ளப்படும்; பறம்பிற்பாரி, வண்டின் கால் என வரும்" என்று உரையாசிரியர் எழுதியது கொண்டுணர்க,

**உரையிற் கோடல்:**

அதாவது ஒன்றனுடைய இலக்கணம் சொல்லியவிடத்தில். சொல்ல வேண்டிய ஒன்று சொல்லாது விடப்பட்டதாயின் அதனை உரைக்கண் உரைத்துக்கொள்ளுதலாம். அவ்விடத்தில் உரைத்துக்கொள்ளவில்லை யென்றால் இலக்கணம் முழுதும் முற்றுப்பெறாது தடுமாற வேண்டிவரும். இவ்வுத்தி ஒன்பது இடங்களில் ஆளப்பட்டுள்ளது. அவற்றுள் சில விடங்களில் உரையிற்கோடல் இலக்கணத்துக்கு மாறுபட்டும் கூறப்பட்டுள்ளது. இலக்கண அமைதிக்கேற்ப ஓர் உதாரணமும் மாறுபட்ட இடங்களும் கூறுகின்றேம்.

(1) எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார் (141)

என்ற நூற்பாவில் உடம்படு மெய்களாவன யாவை எனக் கூறப்படவில்லை. அதனால், "உரையிற்கோடல் என்பதனால் உடம்படு மெய்யாவன யகரமும் வகரமும் எனக்கொள்க" என்ற இளம்பூரணர் கூற்றுக் கொண்டுணர்க. இது கூறிக் கொள்ளாக்கால் உடம்படு மெய்கள் யாவை எனத் தடுமாற வேண்டிவரும். பிறவிடங்களிலும் இவ்வாறே காண்க.

(2) அம் என்ற சாரியை மெல்லினமும் இடையினமும் வருமிடத்து மகரம் கெடும் என்பது,

மென்மையும் இடைமையும் வரூஉங் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர் (131)

என்ற நூற்பாவில் கூறப்பட்டது. புளியஞெரி, புளியயாழ் என்பன காண்க. இதில் "உரையிற் கோடல் என்பதனால் புளிய விலை யெனவும் உயிர் வழிக் கேடும் கொள்க" என இளம்பூரணர் எழுதியுள்ளார். இக்கருத்து ஒன்றென முடித்தல் என்ற உத்திக்கே பொருந்தும் உரையிற் கோடல் என்பதற்குப் பொருந்தாது. புளிய விலை என்பதை இங்குக் கொள்ளவில்லையாயின் நூற்பாவின் பொருள் முற்றுப்பெறுமல் இல்லை.

(3) இவ்வாறே "அன்னவென்னும் உவமக்கிளவியும்" (212) என்னும் நூற்பாவின் உரையில் "உரையிற் கோடல் என்பதனுல் வியங்கோள்முன் வைக்கற்பாலதனை முன்வையாது செய்ம்மன என்பதனை முன்வைத்ததனுல் இவ்வியல்பு முடிபின்கண் செய்ம்மன என்பது சிறப்புடைத்தெனப் பெறப்பட்டது; அதனுல் ஏவல் கண்ணுத வியங்கோளும் இவ்வியல்பு முடிபு உடைத்தெனக் கொள்க; அது மன்னிய பெருமநீ எனவரும்" என்றெழுதியதிலும் உரையிற்கோடல் என்பது பொருத்தமில்லை. முன்வைக்கற்பாலது பின்வைக்கப்பட்டது தலை தடுமாற்றம் தந்து புணர்ந்துரைத்தல் என்னும் உத்தியின்பாற்படுதலாலும், ஏவல்கண்ணுத வியங்கோளும் இயல்பு முடிபு உடைத்து என்பது தன்னின முடித்தல் என்பதன்பாற்படுதலாலும் என்க. அன்றியும் இவ்விரண்டு கருத்துக்களும் சொல்லப்படவில்லையாயின் நூற்பாவின் பொருள் நிறைவுருது என்பதும் இல்லை.

(4) எல்லாம் என்னும் சொற்பற்றிக் கூறவந்தவிடத்தில் 'மெல்லெழுத்துமிகினும் மானமில்லை" (324) என்ற நூற்பாவின் உரைக்கீழ்" "இனி உரையிற்கோடல் என்பதனுல் இறுதி உம்மின்றி எல்லாங்குறிய, எல்லாருங்குறியர் எனவும் வரும்" என்றெழுதியதும் பொருந்துவதாக இல்லை. இது மானமில்லை என்ற இலேசினுற் கொள்ளப்படும்.

இவ்வுரையிற் கோடல் என்பதற்குரிய இலக்கணம் மேற்குறிப்பிட்ட இடங்களில் பொருந்தவில்லையாயினும் பொருத்திக்கொள்ளவும் செய்யலாம். அப்போது ஒன்றெனமுடித்தல், தன்னின முடித்தல் முதலியனவும் உரையிற் கோடலின்பாற்படும். அதனுல் கூறிய இலக்கணங்களில் மாறுபட்டவற்றைப் பொருந்துவன இல்லை என்றே தள்ள வேண்டும்.

அருத்தாபத்தி:

இஃது ஓர் அளவை; உத்தியன்று இதனையாண்ட விடம் பொருந்துவதில்லை என்பது உயர்திரு பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் M.A. Ph D. L. T. அவர்களின் கருத்து. (தொல்காப்பிய எழுத்ததிகாரம் குறிப்புரை) அப்படியாயின் அருத்தாபத்தி என்ற அளவைக்குப் பதிலாக உய்த்துணரவைப்பு என்ற உத்தியை அவ்விடத்தில்கொள்ளலாம்.

பகலுண்ணுன் பருத்திருப்பான் என்புழிப் பருத்திருத்தற்குக் காரணம் புலப்படவில்லை. மகலுண்ணுமை பருத்தமைக்குக் காரணமன்று எனவே பருமைக்குக் காரணம் உண்ணுதலாகவே வேண்டும். ஆதலின் பகலில் உண்ணுயினும் இரவில் உண்பவனுதல் வேண்டும்; இரவில் உண்ணுதலே பருத்திருத்தலுக்குக் காரணமாம். இவ்வாறு காணுதல் அருத்தாபத்தி எனப்படும். இதனுல் அருத்தாபத்தியாவது சொல்லப்பட்ட கருத்து முற்றுப்பெறவில்லையென்ருல் மறுதலையான கருத்தைக் கூறிக்கொள்ளுதல் என்பது புலப்படும்.

'தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் றகரஒற் ருதலும் உரித்தே''

இந்நூற்பாவின் கீழ் உரையாசிரியர், ''அருத்தாபத்தி முகத்தால் தம்முன் தாம்வரின் லகரம் றகர ஒற்ரும் எனவே தம்முன் பிறவந்த விடத்து லகரம் றகர ஒற்ருகாது அகரம் கெடும் என்பது கொள்ளப்படும்'' என்றெழுதினர். இதில் சொல்லப்பட்ட கருத்து தம்முள் தாம்வரின் லகரம் றகர ஒற்ரும் என்பது. சொல்லப்படாதது-மறுதலையானது தம்முன் பிறவரின் எவ்வாரும் என்பது. அதையும் முடித்துக் கொள்ள வேண்டுவது அருத்தாபத்தியால் கொள்வதாம். இங்கு அருத்தாபத்தியின் இலக்கணம் முழுமையும் இல்லாததுபோல் காணப்படுதலின் திரு. சாத்திரியார் அவர்கள் அருத்தாபத்தி என்றது பொருந்தாது என்று கருதினுர்கள். அதனுல் அவ்வளவை கொள்ளாமல் உய்த்துணவைப்பு என்ற உத்தியின்பாற்படுத்திக்கொள்ளினும் இழுக்காது. அளவையே கொள்ளலாம் எனின் மேல் குறித்தபடி விளக்கம் கொள்ள வேண்டும்.

# சிதைந்த சேரநாரராயணபுரம் கல்வெட்டுகள்

மணப்பச்சேரி கா. மாரன், ஆசிரியர், கொட்டாம்பட்டி.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்தகுடி தமிழர்குடி என்று நாம் பெருமை கொள்வதற்கு என்ன சான்றிருக்கிறது? ஒன்றுமில்லை என்றுதான் கைவிரித்தோம். மேல்நாட்டவர்களோ! ''நாங்கள் வழி வழியாக எழுதிவைத்த தொகுப்புகள் எல்லாம், எங்கள் தொன்மையையும் வாழ்வின் செம்மையையும் உண்மையோடு உலகுக்குக் காட்டும் வரலாற்றுச் சான்றுகள்'' என்றார்கள். இதையெல்லாம் உணர்ந்து ஒரு முடிவுக்கு வந்த நாம், ஏன் இல்லை! இதோ புறநானூறு இருக்கிறது. அரசியல் வாழ்க்கை வரலாற்றுக்கு. அகநானூறு இருக்கிறது மணவாழ்க்கை வரலாற்றுக்கு' என நெஞ்சு நிமிர்ந்து சொல்லத் துணிந்தோம். அச்சமயந்தான் நம்மேல் நல்லெண்ணங்கொண்ட சர்மனி தேயத்து டாக்டர் உல்சு துரை என்பார், ''இதையும் நீங்கள் காட்டலாமே! இது போதுமே! உங்கள் வரலாற்று உண்மைகளை அடிதவறாது காட்ட'' என்று நமது அயர்ந்த கண்களைத் திறந்து, கல்வெட்டுகளைக் காட்டினார். அவர் புகழ் வாழ்க! திருக்குறளார் சொன்னதைப்போல்,

> காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும்
> ஞாலத்தின் மாணப்பெரிது —ஆகும்

இன்று அக்கல்வெட்டுகளினால் அன்றோ அன்றைய நம் பண்டை மன்னர்களின் கோல்கோடா ஆட்சியும், புறங்கொடா மறமும், அறங்கெடாக் கொடையும் மட்டுமின்றி, குடிகளின் வழுவாத ஒழுக்கமும்; குன்றாத வளமும்; குறையாத வாழ்வும் பற்றி அறிய முடிகிறது. மேலும் அறியப்

புகுந்தோமானால், ஐயனாரிதனார் கூற்றுப்படி, கல் தோன்றிய காலத்திற்கடுத்து நாமும் தோன்றியதனால், அக்கற்கள் பிறப்புத் தொடர்பு மறவாது; நமது வரலாற்றுத் தொடர்பு அழியாது காத்துவருகிறது என்று சொன்னால் மிகை இல்லை,

அக்கற்களின் நன்றிமறப்பது நன்றல்ல என்று நம்அரசியலார், அதற்கென்று ஒரு துறையை ஏற்படுத்தி கி.பி. 1886 முதல் எங்கெல்லாம் எழுத்துக் கற்கள் இருக்கின்றனவோ! அங்கெல்லாம் தேடி ஓடி திரட்டி, வரிசையாய்ப் பதிப்பித்து வருகிறார்கள். இந்தச் செய்திகளை அறிந்த வேகத்தில்தான் எனக்கும், அந்த கல்வெட்டுத் தேடும் ஆர்வம் 1960 முதல் உண்டாயிற்று. அரசினர் அறிய முடியாத இடங்களிலெல்லாம் பல கல்வெட்டுக்களைப் பிரதி எடுத்தேன். அவைகளில் சில ஏமாற்றம் அளித்தன. சில என் முயற்சிக்கு விருந்தளித்து மகிழ்ச்சி தந்தன. அவைகளில் ஒன்றுதான் கீழே தரும் கல்வெட்டுக் குறிப்புகள்.

## நிதபூஜைகொண்ட பிள்ளையார் சாசனம்

இருக்குமிடம்:—

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் மணப்பச்சேரி ஊராட்சிக்குட்பட்ட புதூருக்கும், தனிசெயத்திற்கும் இடையே பூதகுடி மலைச்சரிவில், சுமார் நான்கு ஏக்கர் அடர்ந்த வனத்தில், இன்று ஓட்டைக் கோவில் எனப்படும் பிள்ளையார் கோவில் இடிந்து ஆழ்ந்த கற்சுவர் கற்களில் காணப்படுகிறது. இரு கல்வெட்டுகள் பண்டைத் தமிழிலும், மூன்று கல்வெட்டுக்கள் தமிழும் கிரந்தமும் கலந்த மொழியிலும் சேர்ந்து எழுதப்பட்டுள்ளன. என்னால் படிக்க முடிந்தவரை அறியும் செய்தி:—

கல்வெட்டு (க) புறமலை நாட்டு வாரணவாசியான சேரநாராயணபுரத்து, நெதபூசை கொண்ட பிள்ளையார்க்கு

மண்டபம் பொன்னமராபதி உதையம்பராக்கிரமமுடையான் அடைக்கலங்காத்தாரான சிமாரகேந்தரகன் தனம் தேடி செய்த தன்மம்.

**கல்வெட்டு (உ)** "திருவைப்பூரை உடையவர்களை ஆதரித்தருளும் மருதகயபெருமாளும் ரனவேலுஉதையம் ஆக்கமுமையான்விடையனும், கலிங்க தேசத்தரசனை கடல் ஒலியும் வேத ஒலியும் முழங்கும் திருமலைக்கருசை நாயகன் மங்களமங்கைபுயத்தில் இருக்கவும், விருதுக்கொடி ஆடவும், இலக்குமி அனேக செல்வத்தை நல்கவும்" என முடித்து, கொம்மயவீமகாலுக்கும்; அழகன் புஞ்சைக்கும் இடையே உள்ள நில எல்லை குறிக்கப்பட்டுள்ளது.

௩, ௪, ௫ ஆம் **கல்வெட்டுக்கள்:** இவைகள் தமிழும்கிரந்தமும் கலந்து எழுதப்பட்டுள்ளன. கோயில் கட்டிய ஆண்டு சம்பந்தமான குறிப்புகள், கிரந்தத்திலும் எக்கியம் பண்ணியது புனர்பூசம் நாள் என்பது தமிழிலும் இன்னும் மற்ற மெய்க்கீர்த்தி வரிகள் கிரந்தத்திலும் உள்ளன. அரசினர் தக்காரைக்கொண்டு படித்தறிந்தால் கட்டிய ஆண்டும், யார் மெய்க்கீர்த்தி என்பதும் தெரியவரும். இன்னும் அகழ்ந்து கீழே பதிந்து கிடக்கும் கல்வெட்டுகளைக் கண்டு பிடித்தால், இன்று முழுதும் அழிந்துவிட்ட இந்தப் பண்டை ஊரைப் பற்றிய வரலாறும், வரலாற்றுத் தொடர்புக்கு வேண்டிய குறிப்புகளும் கிடைக்கலாம்

## எனது ஆராய்ச்சிக் குறிப்புகள்:—

கடல் ஓதமும், வேத ஒலியும் நிறைந்த திருமலைக்கு அரசன் என்று கல்வெட்டு வரிகள் குறிப்பதால், மதுரைத் திருமலை நாயக்கன் அல்லன், திருமலைராயன் பட்டினத்தை யாண்ட திருமலைராயன் எனக்கொள்ளலாம், கலிங்க தேசத்திலிருந்து திருமலைராயன் மரபினர் வந்தனர் அல்லது ஆண்டனர்போலும். அதனால் திருமலைராயன் காலம்; அவ

னின் சீரங்கம் சகஆண்டு 1385ஆம் கல்வெட்டால் கி.பி. 1463 என முடிவு கட்டலாம். அவன் அரசியல் அதிகாரியாக பொன்னமராவதியில் இருந்து அரசியலைக் கவனித்துவந்த உதையம் பராக்கிரமமுடையான் அடைக்கலங்காத்தாரான சீமாரகேந்தரகன் ஆவான். அவன் இக்கோவிலைக் கட்டியுள்ளான். அவன் காலத்தில் இவ்விடத்தில் சேரநாரயணபுரம் இருந்திருக்க வேண்டும். வாரணவாசியான சேரநாரயண புரம் என்பதால் இதன் பழைய பெயர் வாரணவாசியாகும். புறமலைநாடு என்பது பண்டைப் பாண்டிய அரசின் உள் நாட்டுப் பிரிவில் ஒன்று. அப்படியானல் புறமலை நாட்டின் தொடர் இதுவரை இருந்திருக்க வேண்டும். சேரநாரயண புரம் என்பதை ஊன்றிக் கவனிக்கும்போது அதன் பழமை சேர நாட்டில் வைணவப் பற்று மிகுந்திருந்த குலசேகர ஆழ்வார் காலமான 9ஆம் நூற்ருண்டைத்தொடுகிறது. அக் காலத்தில் சேரன் பாண்டிநாடு முழுதும் வென்று அதன் வடதிசை ஈற்றில் தன் குலப்பெயருடன்தான் தழுவியிருந்த மதப் பெயரையும் இணைத்து வாரணவாசி என்ற ஊரை மாற்றி, சேரநாராயணபுரம் என்று வைத்தான் போலும்! அதனுல் இவ்வூர் பழமைக்கும் பழமை மிகுந்த ஊர் எனத்தெரியப்படுகிறது.

---

# *அறவியல்

(கு. மா. திருநாவுக்கரசு)

**வணக்கம்**

உலகுபுகழ் வள்ளுவனார் ஒளிமணியாம்
உயர்குறளை அடியாக் கொண்டே
நலந்திகழும் அறவியலை நவில்கின்ற
நற்பேற்றைப் பெற்றேன் இன்றே;
இலகுபுகழ் தமிழ்ப்பணியைத் தம்முயிரா
யேற்றிலங்கும் என்றன் தலைவ!
வலமுயரக் குறள்பரப்புங் கழகத்தீர்!
வணக்கமொடு கவிசொ லுவனே!

**வாழ்வுக்கலை வகுத்த பெரியார்**

மக்கள் தொகையே பெருகிற் றன்றி
மக்களாய் வாழ்வோர் பெருகவே யில்லை;
மக்களாய் வாழும் வாழ்வுக் கலையை
உலகுக் குதவி யுயர்புகழ் பெற்றவர்
அளவி லடங்கார்; அவருள் முதற்கண்
ஆதி மனுவை அறைபவ ருளரே!
மனுவின் நெறியை மதிகொண் டாயின்
பிறப்பி லுயர்வே தாழ்வுக் கொள்கை,

---

* 1961 ஆம் ஆண்டு மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற கலைமகள் விழாவின்போது திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்த கவியரங்கில் திரு. கி. பழநியப்பன் அவர்கள் தலைமையில் அரங்கேறியவை.

பேதைமைக் கிலக்காந் தீண்டா மைப்பேய்,
பெண்ணுக் குரிமை யிலையென மடமை
மூடப் பழக்கம் முட்டின்று பெருக
நாட்டிற் குதவா தொழிந்தது நலிந்தே!
அரித்தாட் டிலெனும் ஆன்றபே ரறிஞர்
வகுத்த கலைகள் வளர்ந்த விதமோ
வாழ்வைக் கெடுக்கும் அழுக்கா றெனும்பேய்
வளமார் நாட்டிற் பெரும்பே ராசை
சுரண்டற் கொள்கை இகலே கடும்போர்
பெருகி யெங்கும் குருதிப் பெருக்காய்ப்
பிறங்கிய நிலையைப் பெரிது மறிந்தோம்;
மற்றைய பெரியோர் வகுத்த கலைகள்
சுற்றமாய்ச் சுற்றுங் குழுவிற் குரித்தென
மதமெனும் போர்வையில் மாண்புறு நெறிகள்;
வான்புகழ் வள்ளுவர் வகுத்த கலையோ
அறத்தின் களமாய். அன்பின் படியாய்
அருளின் நிலையாய், அமைதிப் பிழம்பாய்
வளமார் செல்வம் வகைபே ரின்பம்
ஏற்ற இறக்கம் யாவு மின்றி
யாரும் பெறவே அமைந்த நெறியால்
இன்றும் இலங்கக் காண்கிறோம் நன்றாய்:
அழிவோ சிதைவோ அணுகவு மில்லை:
அதனா லன்றோ வள்ளுவர் நெறியே
அழியாச் செல்வமா யமைதல் காணீர்!

### குறளின் சிறப்பு

"உவமை பொருளி னுயர்ந்திட வேண்டு"மென்
றுரைத்த காப்பியர் ஓங்குபர் மொழியை
ஒள்ளிதி னுணர்ந்த ஒருபெரும் புலவர்
சிவநெறிச் செம்மல் சிவப்பிர காசர்,
"அடிகள் குறட்பா வடியை யொக்கும்
அம்மை யப்பன் திருவடி" யென்றார்:
அருமைக் குறளே நாளும் அலமரும்
ஆருயிர்க் கருமருந் தாயிலங் கிடுமே
என்னுஞ் சிறப்பை யியல்பா யறிவீர்!

### குறளின் உயிர்ப்பு

குறட்பா வமைப்பைக் கூர்ந்தே நோக்கின்
முப்பெரும் பிரிவா யமைந்த பாவில்
"உலக மொருகுலம்" உணர்த்தவே வித்திடும்
நலஞ்சூழ் நற்கா மத்துப் பாலே;
காமம் வித்திய வித்துக் குரமாய்
ஏமப் பொருளே இலங்கிடு மென்றும்;
இருபெரும் பாலையும் ஒழுங்கி னின்றே
இயக்கிக் காப்பது நல்லற மன்றோ!
இதுவே குறளி னுயிர்ப்பெனத் தெளிக!
இதுவே இன்றைய மார்க்சி னறிவியல்;
இதுவே இன்றைய காந்தியக் கொள்கை
என்றெலாம் பரவி யியங்குதல் காணீர்!

**பாலினமைப்பு**

ஒருவ ருளத்தை யொருவ ரீர்க்கக்
கரைந்தே யுருகுங் காதல் வாழ்வைக்
காம மென்னும் நற்பெரும் பாலில்
உள்ளம் பண்படும் உறைவிட மாகத்
தெள்ளத் தெளிய வுரைத்திட் டாரே;
பொதுநலத் துறையாம் பொருட்டுறை தன்னில்
புகுமுயர் மக்கள் கடமையைச் செய்யப்
பண்படு மனமே பயன்படும் வகையைக்
காணுமா றுரைத்த காட்சியைக் காணீர்;
அறத்தின் றுறையாந் தனிநிலை வாழ்வில்
அறத்தைப் போற்றி அன்பை வளர்த்தே
மனமே வாழும் மாண்பைப் பகன்றார்!

**அறத்தி னியல்**

இன்றுள வுயிர்களில் மக்களே சிறப்பினம்
என்பதற் கிலக்கா யிலங்குவ துளமே!
உள்ளம் என்பதோ ஒருபெரு மாடி;
மாசு படியத் தானும் விளங்கா;
மற்றப் பொருளை விளக்கவுஞ் செய்யா
ஆடியைப் போன்றே அமைந்திடு முள்ளம்;
உளத்தூய் மையே ஓங்கிய நல்லறம்:
உள்ளங் கள்ளமாய் நின்றிட வென்றும்
செய்வன வெல்லாஞ் சிறப்பின வாகா:
பெரும்பே ராகுல மெனப்படு மன்றோ?
கற்றார் கல்லார் செல்வர் வறியர்
குருடர் முடவர் இளையர் முதியர்
யார்க்கும் இயல்வது மதுவே காணீர்!
மனப்பண் பாடும் பயன்படு வகையும்
இனமா யிலங்கி யேற்றம் பெறற்கும்
மனத்தூய் மையே மாண்புறு நிலைக்களன்

(தொடரும்)

# நல்லிசைப் புலமை நலம்

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர், தக்கலை.

செய்யுள் இயற்றல் என்பது ஒன்று. நெடுங்காலப் பயிற்சியினால் அமையுங் கலைகளின் வனப்பைக் கவரும் உள்ளத்தார்க்கு அன்றிச் செய்யுள் வளம் புலப்படாது. பொதுப்படப் பொருள் வெளிறிக்கிடக்கும் உரைநடை இயல்பும் வேறு; செய்யுள் இயல்பும் வேறு, ஆகலான், செய்யுளை இனிது நோக்கி உள்ளூர உவப்பு எய்துதற்கு உரியார் புலமை ஊர்ந்த உள்ளமுடையவராகவே இருத்தல் வேண்டும். சிலர் செய்யுட்களை அறவே வெறுத்து ஒதுக்கு கின்றனர். ஒத்த கல்வியினையுடைய பிறர் சிலர் செய்யுளையே பெரிதும் விழைகின்றனர். இதற்குக் காரணம் என்னை? சிலர் இசைகளைக்கேட்க விழைகின்றலர்; சிலர் இசைகளைத் துருவிக் கேட்டு உவக்கின்றனர். தாம் பாடவறியாரேனும் அறிந்தோர் பாடும் இசைகளைச் சிலர் அவாவுகின்றனர். இதற்குக் காரணமென்னை? செய்யுளும் இசையுமாகிய இரண்டனையும் உவத்தற்கும் ஒதித்தற்குங் காரணம் அவரவர் உள்ளப்பான்மையே; அவற்றில் பற்றுடையார்க்கன்றி அவை இனிமையைப் பயப்பதில. இசைகேட்க விரும்புவோர் பாட அறியாரேனும் இசைநயம் படிந்து கிடக்கும் உள்ளமுடையராதல் போலச் செய்யுளை உணரும் விழைவினர்; ஒருதலையாகப் புலவரல்லராயினும் புலமை தவழப் பெற்ற உள்ளமுடையராவர் என்க.

புலமை உள்ளத்தின் அறிவு நிரம்பிய ஒழுக்கு எனப் படும். அறிவு ஊற்றெடுத்து ஒழுகப் பெறுருடைய செய்யுட்கள் விழுப்பயன் பெறுகில. சொல்லுணர்ச்சியும் பொருளுணர்ச்சியும் பயின்று மன்னிய உள்ளத்தின் பயனே புலமை

யாக முடிதலால், அவை இரண்டனையும் இல்லாதார் செய்யுளின்பம் உணரவல்லா ரல்லர். செய்யுளை விரும்பாதார் யாவர் அவர் அறிவு நுட்பம் இல்லாரே யாவர். ஆராய்ச்சி உணர்வும் கவர்ச்சி உணர்வும் நினைவாற்றலும் புனைவாற்றலும் கொண்டு எழுச்சியும் கவினும் உற யாக்கப்படும் செய்யுட்களை உணர்வோர் அவையற்றின் பயிற்சிக்கண் அரும்பி நின்ற உள்ளமுடையராக இருத்தல் வேண்டும். புலமையின் இயற்கையொழுக்கு இயல்பிலுண்டாகும் இசையுணர்வினை ஒத்தும் நினைவிலும் புனைவிலும் கவினுறுத்துவதிலும் திகழும் புலவரியல்பு ஓவியரது உள்ளியல்பை ஒத்தும் நிகழ்கின்றது. சிறந்த ஓவியங்கள் சீர்த்த செய்யுட்களாம்; செய்யுட்கள் சித்திரங்கள்; காவியம் சித்திரசாலை.

## சொல்லும் பொருளும்

சொல்லும் பொருளும் இனிது வாய்ப்பக்காட்டாவிடத்துச் செய்யுள் சிறப்பு எய்துவதில்லை. பொருள் இயைபு உற ஒழுகல் வேண்டும்; அவ்வொழுக்கத்தைத் தொடர்ந்து சொற்களும் ஒழுகல் வேண்டும். இதுவே சிறந்த புலமைக்கு முதற்கண் இன்றியமையாதது எனப்படும். புலவன் குறித்த கருத்துச் செய்யுளில் இனிதுற ஒழுகாதாயின், அதனைப் பயில்வோர்க்கும் அவனது கருத்தை உணர்தல் இயலாது. ஆகவே, செய்யுள் நோக்குடைப் பொருளிற் பிறழ்ச்சியுற்றுப் பயன் இழக்கும் என்பது. இம்முதல் இலக்கணம் அமைந்த பின்னர் அணிகள் முதலிய ஏனைய அழகுகளும் அமையின் சாலச்சிறப்புறும். வாய்ப்புடை ஒழுக்கு மட்டும் புலமையைக்காட்டாது.

## பொருளழகு

ஒருபொருளைக்குறித்துத் தோன்றும் புலவன் கருத்துப் பயில்வார்க்கு உள்ளக் கவர்ச்சியை அருப்பத்தக்கதாயும்

பின்னர் அதிலே அழுந்தத்தக்கதாயும் இருத்தல் வேண்டும். '**கதிரவன் தோன்றினன்**' என்னுங் கருத்தை அவ்வாறே கூறுவது புலமை எனப்படாது படுமேல், அவ்வாறு யாரும் கூறுதலால் அனைவரும் புலவரேயாதல் வேண்டும். புலவர் கருத்து எப்போழ்தும் பொதுமக்கட்கூட்டத்தின் அறிவைக் கடந்ததொரு நுண்ணுலகில் உலாவுகின்றது. ஆதலின், அவர்கள் ஏனையோர் உரைப்பதினும் கவினும் நுண்மையும் கனலவே எதனையுங் கட்டுரைப்பர். கதிரவனுடைய தோற்றத்தை நோக்கிய புலவன், "அஞ்ஞானத்தை அகற்றும் அறிவை யாவரும் எய்த அளிக்கும் இனிய ஆசிரியனைப் போலத் தன் ஆயிரம் கரங்களானும் பகையாகிய இருளைத் திசைதொறும் சீத்து ஒதுக்கிக்கொண்டு கீழ்த்திசைக்கண் கதிரவன் தோன்றினன்" என்கின்றனன். முழுமதித் தோற்றம் கண்ட புலவன், "கீழ்த்திசையாகிய பெண் தன் மலர்ந்த முகத்தை உயர்த்து நோக்கினாற் போலும் திங்களின் தோற்றம்' என்கின்றனன். இவ்வாறு புனைந்து கூறுவதன் நோக்கமும் பயனுமென்னை? உள்ளவாறே நிகழ்ந்தது கூறுவதன்றோ எளிது? எனின், அஃதன்று. தமக்கும் பயில்வார்க்கும் இன்பத்தை ஊட்டுவதே புலவரது தொழிலாதலால், அவர் எதனையும் இன்பு அரும்பக் கூறுவதே இயல்பாம் என்க. இவைபோல்வன எல்லாம் இல்லாதன புணர்த்திச் சொல்வனவாதலால், பொய் எனப்படுமெனின், அவை ஒருதலைபாகப் பொய் அல்ல. பொய்போலச் சில கூறி நிகழ்ச்சியை மெய்ப்பட உணர்த்தும் இயல்பினவாம் என்க. புலவர்க்குத் தாம் பொய்கூறிப் பிறரை மயக்குறுத்த வேண்டுமென்பது கருத்தன்று. புலவர் உரைகளின் உள்ளுறைகளை நோக்காது புனைவுரைகளை மெய்யெனக் கருதி மயங்குவோர் புலமையுண்மை தெளியாதாரே யாகின்றனர். ஒரு சுவைப்பட்ட உணவைப் பல சுவைகளுடன் உண்ணும்போது உண்டாம் இன்பமே புலவர் நினைவுகளால் நாம்

நுகர்வது. நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே கூறக்கேட்பது ஒரு படிப்பட்ட சுவையை நுகர்வது போலும். அதனைப் புனைவுறக் கேட்பது இன்பம் பயக்கும் பல சுவைகளை அதனொடு நுகர்வது போலும் என்பது.

வேறுபல புனையாது நிகழ்ந்ததையே கவின்செறியக் கட்டுரைப்பதும் சால இன்பம் பயந்து நிற்கும். அவ்வுரைக்கண் தன்மை அழகு மலிந்து காணப்படல் வேண்டும். தன்மையழகு செறிந்து காணப்பட வேண்டின், நிகழ்ச்சியின் ஒவ்வொரு வகையையும் நுனித்து அவற்றின்கண்ணெல்லாம் ஒழுகும் கவினைப் புலவன் வெளிப்படச் செறிக்க வேண்டும். "ஒரு பாவை தன் கருநிறம் பொருந்திய கூந்தலை ஒரு கையால் உளர்ந்து கொண்டும், ஒரு கையால் கண்ணுழைவரிய ஆடையைக் கீழ்விழாது நகிலத்து மெல்ல அழுத்திக்கொண்டும், கண்டாருள்ளம் கவர்படத் தன் சீர் அடிகள் சேப்பவும் கண்கள் கடைக்கண்ணே கோடவும் மென்மெல நடந்தனள்" என்பது ஒரு பெண்ணின் நடை இயல்பை கவினுறக் காட்டுகின்றது. இதன்கண் புனைவுகள் இல. புனைவுகள் இன்றிக் கவினுறுத்துவது கூரிய ஆராய்ச்சியிலார்க்கு முற்றிலும் அரிதாகும். புலமையுள்ளம் சிறிதும் பிறவாராயின் 'கூந்தலை வாரிக்கொண்டு ஒரு பெண் மெல்ல நடந்தாள்' என்றே கூறிவிடுவர். ஏனைய நிகழ்ச்சிகள் அவர்களுடைய கண்கட்கு எய்துவனவல்ல. இவ்வியல் பொருள் புனையப்படின் இதனினும் இன்பமும் பொருள் விளக்கமும் பயந்து நிற்கும். அதனைக் கீழ்வருமாறு உணர்ச்சி கதுவ நோக்குக. "திருவனைய ஒருபாவை மேகத்திரளனைய தன் கருநிறக் கூந்தலைக் காந்தள் அனைய ஒரு கையால் உளர்ந்தும், ஒரு கையால் விசும்பு உரித்தன்ன ஆடையை நெகிழாது செப்பைக் கடியுங் கொங்கைத் தடத்து அழுத்தியும், கண்டாரது உள்ள வண்டுகள் தன் அழகெனும் நறவிலே

மொய்ப்பத் தன் கமலமலரடிகள் பவளமெனச் சேப்பவும் கட்கடைக் கோல்கள் காமுகர் நெஞ்சம் பிளப்பவும் அன்ன மென மென்மெல அடிபெயர்த்தனள்'' இப்பொருண்மையே ஒரு சீரிய புலவனுக்கு ஒரு சிறுகாப்பியமாதலுங் கூடுமென்க. புலமைத் திறம் பொருட்கவினில் பொதுளி நிரம்பிக் கிடப் பதாகும். கீழ்வருவது தன்மையழகுபட நின்றதொரு **கம்ப சித்திரம்**

> ''தோயும் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
> ஆய வெள்வளை வாய்விட்ட ரற்றவும்
> தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
> ஆய மங்கைய ரங்கை வருந்துவார்''

''படிந்த வெள்ளிய தயிரிலிட்டுக் கடையும் மத்தினொலி வகைகள் சிலம்பவும், அழகிய வெள்ளிய வளையல்கள் வாய் விட்டு ஒலிக்கவும் தேய்ந்த தமது நுட்பமான இடைகள் இருபாலும் அசைந்து வாங்கவும் இடைப்பெண்கள் தம் அழகிய கைகளால் வருந்தித் தயிர் கடைவராயினர்'' என் னும் பொருண்மையைக் கம்பர் இச்சித்திரத்துச் சீரிய சொற்களில் வடித்தது காண்க. இதனுள், '**தயிரை வருந்திக் கடைவார்**' என்னாது, '**அங்கை வருந்துவார்**' என்றது சால நயம் பயந்து நிற்கின்றது. அதனால், கடைதல் குறிக்கப்பட வில்லையேனும் ஏனைய அடிகள் தயிர் கடைதலின் இயல்பை விளக்குதலால், பொருள் செவ்வன் தெளிவுற்றது. எனவே, ஈற்றடி ஏனைய அடிகளைத் தன்னுட் பொருள்வகையாற் செறித்துக்கொண்டு நின்றதாயிற்று. இங்ஙனம் வரும் அடி களுக்கு, ஏனைய அடிகளின் பொருளுணராவிடத்துப், பொருள் காண்டல் அரிது. 'அங்கை வருந்துவார்' என்ற

சொல்லாற்றலால், 'அவர்களுடைய அழகிய கைகள் இவ்வாறு வருந்தத்தக்கனவல்ல' என்னும் அரும்பொருளும் உடன்றோன்றுகின்றது.

## நடை-பொருள் நுணுக்கம்

சில செய்யுட்கள் பொருள் எளிது அறிவரிய என ஒதுக்கப்படுகின்றன. சொன்னடை செறியாதனவற்றைப் பலர் எளியநடை எனப் புகல்கின்றனர். உண்மையினோக்குமிடத்து எளிமையும் அருமையும் பொதுப்பட யாவர்க்கும் ஏற்புடைத்தன்று. அவரவர் கல்வி வலனைப் பொறுத்து நடை எளிது மரிதுமாகின்றது. ஒருவர் அரிது என ஒதுக்கிய ஒருநடை அவரினும் கல்வி சான்ற பிறர் ஒருவர்க்கு எளியநடை எனப்படுகின்றது. கல்லாதார்க்கு எந்நடையுமெளிதன்றாகலான், யாவர்க்குமெளிதான நடையில் எழுதுதல் வேண்டுமென்பது பொருத்தமன்று, இனி, உரைநடை வேண்டுமிடத்து உலகியற் சொல்லானும் அமைக்கப்படலாமாயினும், செய்யுணடை பெரிதும் செய்யுள் வழக்கைப் பொறுத்து அமைக்கப்பட வேண்டுதலின், யாவர்க்குத் செய்யுள் எளிது எனப்படாது.

மொழி எத்துணைக்கு உதவுமோ அத்துணைக்கும் புலவன் தன் கருத்துக்கேற்ற சொற்களைத் துருவி அமைக்கற்பாலன்.* அன்றியும் சிலவிடத்துப் புலமை உண்மை மொழிக்கும் அடங்காது நிமிரின், சொற்களைத் தனக்கேற்றவாறு விகாரப்படுத்தியும் தான்வேண்டும் பொருட்குக்

*The principle goveming the poets' technique is that he oust utilze every means that language affords to commuincate his experience to the reader, —*Jaggan*

கட்டுப்படுத்தியும் புலவன் வழங்கத் தலைப்படுவன். பல சொற்களைக் கொண்டு கூட்டித் தன் கருத்தை நிறுவுதற்கும் புலவன் தலைப்படுவதுண்டு. மொழியில் தன் கருத்துக் கேற்ற சொற்கிடையாமையால் புலவன் அவ்வாறு செய்கின் றனன். மொழியிற் கருத்துக்கு உரிய சொற்கள் கிடப்பவும், சொற்களைச் சிதைத்து வழங்கத் தலைப்படுவது புலமை யாகாது.

எனவே பொருணுணுக்கத்தின் பொருட்டுப் பல மரபு களும் புலவராற் கையாளப்படுதலின், செய்யுள்நடை புலவர் மரபு உணர்ந்தார்க்கே நன்கு புலப்படுவதாம்.

புலவன் பெரிதும் நுண்ணிய பொருளை அமைப்பதி லேயே கருத்து உடையவனுவன். நுண் கருத்தின்றிக்கிடக் கும் செய்யுட்கள் நின்று நிலைப்பனவல்ல. செய்யுட்கள் எஞ் ஞான்றும் வாடாமலர்கள் என ஒளிர்தல் வேண்டும். ஆய்வு தொறும் பொருணுணுக்கம் புலப்பட யாத்தலே சீரிய புலமைக்குச் சான்றும். "**அறிதோறறியாமை கண்டற்ருல்**" எனத் திருக்குறளிற் கூறியது சிறந்த செய்யுளை நோக்கிற்று. 'கற்ருெறுங் கல்லாமை' காணயாக்குஞ் செய்யுட்கள் அறிவு டையார் உள்ளத்திற்கு அருவிருந்து ஆகும்.

ஒரு செய்யுட் கண்ணே பல பொருளுந்தோன்றச் செய் தல் நல்லிசைப் புலவர்க்கே பெரிதும் இயல்வதொன்று. இடத்திற்கேற்ற பொருள் அமைவதன்றியும் பொதுநீதி, கதைக்கு இயன்ற நிகழ்ச்சி முதலியவற்றைத் தோற்றுவிக் குஞ் சொற்ருெடர்களும் சிறந்த புலவருடைய செய்யுட் களிற் காணப்படும். காப்பியங்களை நுணுகி ஆயுமிடத்துப்

புலவர் அவற்றிற் செறித்த புதையல்கள் போதரும். அவை எடுத்துக்கொண்ட கருத்துக்கும் மேல்வரும் நிகழ்ச்சி முத லியவற்றுக்கும் தோற்றுவாய்களாக நிற்பதை அறிந்த விடத்து உண்டாம் உவகைக்கு எதிரின்று.

## உரைநடை-செய்யுணடை

உரைநடை பெரிதும் வெளிறுபட்டு புனைகவினின்றிப் பொருண்மையை உணர்த்திநிற்கும். பொது அறிவும் மொழிஉணர்ச்சியுமுடைய யாவர்க்கும் உரைநடை எளிது பட்டுக்கிடக்கும். செய்யுளுணர்ச்சிக்குப் போலக்கூறிய அறிவு உரைநடைப் பயிற்சிக்கு அகத்தியமன்று. செய்யுள் கூறவந்தபொருண்மையைக் கவினுறுத்தி அறிவுடை உள் ளத்திற்கு விருந்தாய் இலகும் சொற்கள் பல்வேறு பொருள் படவும் கவினுறவும் செய்யுட்கண் அமையும். சிலவிடத்துச் சொற்கள் விகாரப்பட்டும் நிற்கும். உரைநடையின் வேறு படச் செய்யுட்கள் சிறப்பாகக் காணப்படுவது யாப்பு என் பது. ஒவ்வொரு செய்யுட்கும் ஒவ்வோர் யாப்பு உளது. அவ் யாப்பிற்கிணங்க அமையாவிடத்துக் கருத்துச் செறிந்து கிடப்பினும், செய்யுள் எனப்படாது. யாப்பினீங்கி ஏனைய வெல்லாம் செய்யுளோடு ஒப்ப ஆற்றல் எய்தி இலங்குவது உரைச் செய்யுள் எனப்படும், உரைநடையி னும் செய்யுணடை ஒழுக்கு மாறுபடும். பொருட்சிறப்புக் கேற்றவாறு சொற்கள் முன்னும் பின்னும் செய்யுட்கண் கொண்டு கூட்டப்படும். 'கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்' 'அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய—நூலின் றிக் கோட்டி கொளல்' 'பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க—நாகரிகம் வேண்டுபவர்' என்பனவற்றை 'கற் பினுக்கணியைக் கண்களால் கண்டனன்' 'நிரம்பிய நூலின் றிக் கோட்டிகொளல் அரங்கின்றி வட்டாடியற்று' 'நயக்கத் தக்க நாகரிகம் வேண்டுபவர் பெயக்கண்டும் நஞ்சுண்டமை

வர்' என மாற்றிக் கூறுமிடத்து உரை நடையாவதன்றிச் செய்யுணடையாவதின்று. அன்றியும், நடைமாறியவிடத்துப் பொருளாற்றலும் கெட்டுகின்றது. செய்யுளில் பொருட்பொலிவு, பொருட்சிறப்பு, பொருளின் தகவு முதலியவற்றுக்கேற்ப நின்ற பொருட்டொடரைத் தொடர்ந்து சொற்கள் செல்லும். உரை நடையில் செய்தவன் செய்கை என்னும் காரணகாரிய முறைப்படி நடை அமையும். அங்ஙனம் அமைக்குமிடத்து நிகழ்ச்சியின் இயல்பு மட்டும் தோன்றுவதன்றிக் கவர்ச்சி ஏற்படாது. ஆதலால், ஒருவருடைய மெய்ப்பாட்டை உணர்த்துவதற்குச் செய்யுளைப் போலும் சிறந்த கருவி பிறிதுயாது மின்றும் என்பது. அகப்பொருட் செய்யுளிலக்கணங் கூறுமிடத்து மெய்ப்பாடும் உரைக்க வேண்டுமென்னும் விதி அமைதியே செய்யுளுக்கும் மெய்ப்பாட்டுக்கும் உரிய இன்றியமையாத்தொடர்பினை விளக்கும் என்க.

(தொடரும்)

# ஒலியன் வரலாறு

ச. அகத்தியலிங்கம்,

இந்தியானு பல்கலைக்கழகம், அமெரிக்கா.

1 இன்று தமிழ்நாட்டில் தமிழைச்சிறப்புப் பாடமாக எடுத்துப் பயிலும் மாணவர்களின் பாடப்பட்டியலில் மொழி இயல் (Linguistics) புகுந்திருப்பதைக் காணலாம். இதற்கு முன்னுல் மொழிநூல் (Philology) பாடமாக அமைந்திருந்தது. தமிழ்நாட்டு மொழிநூல் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் கால்டுவெல் துரையாவார். அவருடைய நூல் ஒரு கருவூலமாக அமைந்திருந்த போதிலும் இன்றைய மொழி இயல் வளர்ச்சியால் பலவிதமான மாற்றங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். அந்த நூல் ஓர் ஒப்பிலக்கண நூலாகும். இன்று மொழி இயல் ஓர் அறிவியலாக (Science) வளர்ந்துள்ளது. இதனை அறிவியல் என்றே அழைக்கின்றனர். (Linguistic Science). இதனை "விவரண மொழி இயல்" (Descriptive) வரலாற்று மொழிஇயல் (Historical) ஒப்பு மொழிஇயல் (Comparative) என்று பலவிதமாகப் பிரிக்கின்றனர்.[1]

2 இவற்றுள் விவரண மொழிஇயல் என்பது ஒரு மொழியின்கண் காணப்படுகின்ற கூறுகட்கு இலக்கணம் கூறுவதாகும். இதன் சிறப்பு என்னவெனின் மொழியின் கண் அல்லது பேச்சின்கண் காணப்படுகின்ற இலக்கணக் கூறுகளை அவ்வாறே விவரிப்பது ஆகும். இந்த இலக்கணத்தில் பழங்காலச் சொற்கள் பற்றிய ஆராய்ச்சி, அதன் செல்வாக்கு முதலியன வருவதில்லை. இலக்கணக் கூறுகளை எங்ஙெந்த விதத்தில் விவரித்தால் இலக்கணம் தெளிவும் எளிமையும் பெற்று விளங்கும் என்பதுதான் விவரண

1. An Introduction to Deseriptive Linguistics Cleason P.P.II

மொழிஇயல் ஆசிரியனின் நோக்கமாக அமையும். எடுத்துக் காட்டாக ஒன்று கூறலாம்.

என்னுடைய சாதரண வீட்டுப் பேச்சில் "நான் வாறென்" என்ற வாக்கியம் காணப்படுகிறது. இதில் வாறென்" என்ற சொல் "வருகிறேன்" என்று கல்லூரி வகுப்பறைகளில், மேடைகளில் பேசுகின்ற சொல்லுக்கு ஒப்பானதாகும். முன்னதும் பின்னதும் நிகழ்காலத்தைக் குறிக்கின்ற சொற்கள். பின்னதில் நிகழ்காலத்தைக் காட்டுவது "கிறு" என்ற இடைநிலை என்பதை நாம் அறிவோம். ஆனால் முன்னதில் நிகழ்காலத்தைக் காட்டுவது எது? ஒரு மொழிஇயல் மாணவன் இதனை ஆராய இது போன்ற பல சொற்களை எடுப்பான்.

| | |
|---|---|
| வாறென் | (வருகிறேன்) |
| போறென் | (போகிறேன்) |
| தாறென் | (தருகிறேன்) |
| பேசுறென் | (பேசுகிறேன்) |

இச்சொற்குழுவை ஒப்புச்சொற்குழு (paradigm) என்று அழைப்பர். இவையனைத்தும் நிகழ்காலத்தை குறிக்கின்ற சொற்கள். இவற்றுள் வா, போ, தா, பேசு போன்ற பகுதிகள் (Stems) வேறு வேறு பொருளைத் தருபவை. "என்" என்ற விகுதி (suffixes) ஒருமைத் தன்மையைக்குறிப்பது. "ற்" என்ற இடைநிலை (suffix) நிகழ்காலத்தைக்காட்டுவது. எனவே இதனை ஆராயும் விவரண மொழிஇயல் மாணவனின் பணி இவ்வாறு முடியும். ஆனால் ஒப்பு மொழிஇயல் மாணவனோ, அறிஞனோ ஆராயும் போது "போகிறேன்" போன்ற சொற்களில் காணப்படும் "கிறு" என்பதோடு இதனை ஒப்பிடுவான், சங்ககாலத்தில் நிகழ்கால இடைநிலைகள் இருந்தனவா? என்பது பற்றிப் பேசுவான். இப்போது வரலாறும் ஒப்பும் மயங்குகின்றநிலை. ஆனால் விவரண மொழிஇயல் அறிஞன் இதில் தலையிடுவதில்லை. ஆனால் ஒன்றுக்கு ஒன்று துணை புரியும்.

3. விவரண மொழி இயலை மூன்று பெரும் பிரிவு களாகப் பிரிக்கலாம்.

1. ஒலியன் இயல் (Phonology
2, சொல்லியல் (Morphology)
3. தொடரியல் (Syntax)

இவற்றுள் ஒலியன் இயல் மொழியின்கண்ணுள்ள ஒலியன் (Pnonemes) பற்றியும் அவற்றின் தனித்தன்மை (Distinctive feature) பற்றியும், நிலை பற்றியும், மயக்கம் பற்றியும் பேசுவதாகும். அவற்றைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் அன்று. எனினும் மாணவர்கள் நன்ருகப் புரிந்து கொள்ளும் பொருட்டு ஒரு சிறிது காண்போம்.

4 ஒரு மொழியின் ஒலியன் பற்றி ஆராய்வதற்கு அடிப்படையாக ஒலிபற்றி ஆராய்தல் வேண்டும். உலகில் காணப்படும் அல்லது கேட்கப்படும் ஒலிகளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

1, பேச்சொலி (Speech Sound)
2. பிற ஒலி (Non Speech Sound)

இவற்றுள் பேச்சொலியே நம்முடைய கவனத்துக்குரியது. மனிதர்கள் பேசும் போது அவ்வொலியின்கண் பலவித ஒலிகளைக் கேட்கமுடியும். எடுத்துக்காட்டாக "பாகம்" என்ற சொல்லை உச்சரியுங்கள். இதில் ப்+ஆ+க்+அ+ம் என்ற ஒலிகளைக் கேட்கிறோம். இவ்வொலிகளை 'ஒலிக்கூறு' அல்லது "ஒலி" (Phone) என்று கூறலாம். இவற்றை ஒலி வகையில் (Phonetic) எழுதும் போது [paxam] என்று எழுதுவார்கள். இதைக் கண்டவுடன் தமிழர்களாகிய நாம் 'K' என்று எழுதுவதற்கு பதில் 'X' என்று எழுதியது ஏன்? என்று எண்ணுவது இயற்கை. இப்போது "கடல்" என்ற சொல்லை உச்சரியுங்கள். அதை முந்திய வகையில் எழுதும் போது

[Katal] என்று எழுதுவார்கள். உச்சரிக்கும் போது சொல்லுக்கு முதலில் வருகின்ற ககர வொலிக்கும் சொல்லின் நடுவில் இரண்டு உயிர் எழுத்துக்கட்கு இடையில் வருகின்ற ககரவொலிக்கும் வேற்றுமை இருப்பதை உணரலாம். உயிர் எழுத்துக்கு இடையில் வருகின்ற ககரவொலி திண்ணியதாக இல்லை. ஆங்கிலச் சொல்லான Paxam என்பதில் வருகின்ற ஒலி போன்று இருக்கிறது. எனவேதான்

பாகம் என்பதை [paxam] என்றும்

கடல் என்பதை [Katal] என்றும்

ககர வொலியில் வேற்றுமை காட்டி எழுதுகின்றனர். இவ்வாறு எழுதுவதை "ஒலிவகை எழுத்து" என்று கூறலாம்.

தமிழ் தெரியாத நண்பர் ஒருவரிடம் [pakam] [Katal] என்ற இரண்டு சொற்களையும் இவ்வாறு எழுதி வாசிக்கக்கூறினால் அவர் "பாகம் என்ற சொல்லில் வருகின்ற ககர வொலிக்கும் "கடல்" என்ற சொல்லில் வருகின்ற ககரவொலிக்கும் எவ்வளவு அழுத்தமும் திண்மையும் கொடுப்பார். அவருடைய உச்சரிப்பிலிருந்தே அவர் தமிழ் அறியாதவர் என்று கூறிவிடலாம். (நாகர்கோவிலில் நான் இருந்தபோது என்னுடைய மலையாள நண்பர் ஒருவர் தொல்காப்பியம் என்ற சொல்லை உச்சரித்தபோது மிக அழுத்தமாகவே உச்சரித்தார்) இதேபோன்று ங்கரத்துக்குப் பின் வருகின்ற ககரமும் ஒலியில் வேற்றுமை உடையது. ககர வொலிகளின் வேற்றுமைகளைக் கீழே வருகின்ற சொற்களில் காணலாம்.

| தமிழில் | ஒலிவகையில் |
|---|---|
| கடல் | [Katal] |

பாகம் [Paxam]
தங்கம் [Tangam] [1]

ககரவொலிக்கு இங்கு மூன்று விதமான ஒலிவகை எழுத்துக்கள் அமைந்திருப்பதைக் காணுங்கள். காரணம் தமிழில் எழுதும்போது 'க' என்ற எழுத்தால் எழுதப்படுகின்ற ஒலி மூன்று விதமாக நமக்குக் கேட்கின்றன.

5. **ஒலிவகை எழுத்து** (Phonetic writing) மேற்கண்டவாறு எப்படிக் கேட்கிறோமோ அப்படியே எழுதுவதை ஒலிவகை எழுத்து என்று கூறலாம். இவ்வாறு எழுதும்போது அச்சொற்களையோ தனி எழுத்துக்களையோ [ ] இத்தகைய இரண்டு கோடுகட்கிடையே எழுதுவது வழக்கம்.

தமிழில் "பின்" என்ற சொல்லை ஒருவன் உச்சரிக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். இதனை நாம் உச்சரிக்கும்போது (pin) என்று உச்சரிக்கிறோம். தெரியாத காரணத்தால் ஒருவன் (bin) என்று உச்சரித்தாலும் தமிழில் பொருள் மாறுபடுவதில்லை. காரணம் தமிழில் (p)யும் (b)யும் தனித்தன்மைபெற்றதில்லை. (Distinctive feature) அவனுடைய தமிழ் தெரியாத தன்மை நமக்கு விளங்குமேயன்றிப்பொருள் மாற்றத்தை நம்உள்ளம்கொடாது. ஆனால் ஆங்கில மொழியில் இவ்விரண்டு ஒலிகளும் பொருள் மாற்றத்தைக் கொடுக்கும். (big) என்பதும் (pig) என்பதும் வேறுவேறு பொருளைத் தருவன. இவ்விரண்டும் தனித்தன்மைபெற்றவை.

---

(1) நகரத்துக்குப் பதில் மகரம் உபயோகிக்கப்பட்டுள்ளது. இதன் காரணம் அறியப் பேராசிரியர் சுப்பிரமணியம் அவர்களின் "புறநானூறு ஒலியின் இயலை" க் காண்க.

ஆங்கிலச் சொல் (Colour) என்பதை எடுப்போம். இதனைச் சிலர் (Kalar) (களர்) என்றும் சிலர் (Kalar) (கலர்) என்றும் உச்சரிப்பர். இதைக் கேட்கும்போது ஆங்கிலம் தெரிந்தவர்கள் பொருள் மாற்றத்தைத் தருவதில்லை. நிறத்தைக் குறிக்கிறன் என்றுதான் கொள்ளுவோம். ஆனல் தமிழில் "லகர" (l) ஒலிக்குப் பதில் "ளகர" (l) ஒலியை இட்டால் பொருள் மாற்றம் ஏற்பட்டுவிடும்.

(Kal) கல்
(Kal) கள்

காரணம் தமிழில் லகரம் ளகரமும் (l) (l) தனித் தன்மைபெற்றவை. ஆங்கிலத்தில் அங்ஙனமன்று.

இங்ஙனம் ஒலிகள் தனித்தன்மைபெற்று விளங்கினல் அவற்றை ஒலியன் (Phoname) என்பர்[1] தமிழில் (K) (X) (g) என்பவை தனித்தன்மை தம்முள் பெற்றனவல்ல. (K) சொல்லுக்கு முதலிலும், இடையில் இரண்டு ககர ஒலிகள் வரும்போதும், (X) சொல்லுக்கு நடுவில் இரண்டு உயிர் எழுத்துகட்கு நடுவிலும் (g) ஙகரத்துக்குப் பின்னும் வருகின்றன. எனவே ஒன்று வந்த இடத்தில் இன்னென்று வருவதில்லை.[2] மேலும் இவை எங்கெங்கே வருகின்றன என்

1. Phoneme is a minimum unit of distinctive Sound feature Bloomfield Language Henry Holt & Company 1933. P. P. 79.

2. இதனை ஆங்கிலத்தில் "Complementary distribution" என்பர். Sound sare Said to be in camplementary distribution whome each occurs in a fixed Sets of contexts in which none of the others occur. (An Introduction to Descriptive Linguistics P. P. 269).

Outling of Linguistic Analysis Bernard Bloch and Trager Baltimove 1942. P. P. 42.

பதை நம்மால் தெரிந்துகொள்ள முடிகிறது. எனவே இவை கள் ஒரேவகையைச் சார்ந்தன ஒரே ஒலியனைச் சார்ந்தவை என்று முடிவுகட்டுகிறோம். இதன் காரணமாகத்தான் தமிழுக்கு எழுத்துக் கற்பித்தவர்கள் ஒரே எழுத்தை(க்)க் கையாண்டனர். அதன் காரணமாகத்தான் (k) என்ற ஒலியாயினும் (x) என்ற ஒலியாயினும் (g) என்ற ஒலியாயினும் (k) என்ற ஒலியனால் எழுதுகின்றனர். ஒலியன் வகையில் எழுதும்போது ( ) இது போன்ற சரிந்த கோடுகட்கிடையில் எழுதுவது வழக்கம்.

| தமிழில் | ஒலிவகையில் | ஒலியன்வகையில் |
|---|---|---|
| கடல் | kətal | katal |
| பாகம் | pəxam | pəkam |
| தங்கம் | tankam | tamkam |

இதிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகட்கு வரலாம் தமிழில் உள்ள ககரவொலி (k) (g) (x) என்ற மூன்றொலியைக் கொண்டுள்ளது. இம்மூன்றினையும் ககர வொலியனின் சார்பொலி அல்லது இனவொலி (allophones) யாகக் கொள்ளலாம்[1] இவற்றுள் ஏதாவது ஒன்றின் உருவத்தை ககர வொலியனின் உருவமாகக் (Norm) கொள்ளலாம். வசதியின் பொருட்டும் பிற காரணங்களின் பொருட்டும் (k) என்பதை ஒலியனின் உருவமாக எழுதலாம். இவ்வாறு ஒலியனை குறிக்கும்போது சரிந்த கோடுகளின் இடையே எழுத வேண்டும்.[2]

---

(1) Any Sound or Sub class of Sounds which is in complementary distribution with another so that the two together constitute a Single phoneme is called an allophone of that phoneme. Gleason. P. P. 263.

(2) In order to distinguish phonemic Symbols from phonetic we enclose the former between diagonals: [p] = a voiceless unaspirated Dilabial Stop; | P | = any phoneme in a particular language that we have agreed to write in this way. Outline of linguistic Analysis Bloch P.P. 47.

(தொடரும்)

# மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

## I. சங்க வெளியீடு

| | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக் கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கணநூல் (5) இனியது நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 8 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாக யோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சன தீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப் பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பக மூலமும் உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினா விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகை திருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30. | ஞானமிர்தக் கட்டளை | — | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 33. | உவமான சங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 | 0 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 | 0 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 | 0 |
| 49. | கூடற்புராணம் | — | 0 | 10 | 0 |
| 50. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 | 0 |
| 51. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 | 0 |
| 52. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 | 0 |
| 53. | பாப்பாவினம் | — | 0 | 10 | 0 |
| 54. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 | 0 |
| 55. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 | 0 |
| 56. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 | 0 |
| 57. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 | 0 |
| 58. | கலைசைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 59. | பெருந்தொகை | — | 5 | 0 | 0 |
| 60. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 | 0 |
| 61. | சிராமலைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 62. | மத்யவியாயோகம் | — | 0 | 2 | 0 |
| 63. | அமிர்தரஞ்ஜநி | — | 0 | 2 | 0 |
| 64. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 | 0 |
| 65. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 | 0 |
| 66 | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 | 0 |
| 67. | மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் | — | 2 | 0 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4 - 50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8,9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

---

இவ்விதம், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.